1970 ஆகஸ்ட் 31]

* 155 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் கணக்குப் பிரிவை 1—7—1969-ம் தேதி முதல் மாவட்ட அளவில் நடைமுறைக்குக் கொண்டு வந்ததின் மூலம் கடன் பெறுவோருக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை?

மாண்புமிகு சி. பா. ஆதித்தனர்: கடன் தொகையை, கடன் பெறுவோர் விரைவில் பெறுகின்றனர்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் கடனுக்கு விண்ணப்பித்துக் கொள்ளக் கூடியவர்கள் மாவட்ட அளவிலே அலுவலகங்கள் இருந்தாலும்கூட சென்னைக்கு அந்த ரிக்கார்டுகளை அனுப்பிப் பெற்றுதான் தர முடியும் என்கிறார்கள். இன்னும் விரைவாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் கூறியது, முன்னாலே நில அடமான வங்கிகள் என்று இருந்தபோது. ஆனால் நிலவளவங்கிகள் என்று ஆனபிறகு, மாவட்ட அளவிலேயே முடிவு எடுக்குமாறு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, நிலவள வங்கியில் அடிக்கிணறு வெட்டுவதற்கும், பம்ப் செட்டுகள் வைப்பதற்கும் பணம் கொடுப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். மதுரை மாவட்டத்திலிருந்து தகவல் வந்திருக்கிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. மூலக் கேள்வி எல்லா மாவட்டங்களிலும் கணக்குப் பிரிவை நடைமுறைக்குக் கொண்டு வந்ததைப்பற்றி.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த நில வள வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. முன்னாலேயே சர்க்காரிடம் கடன் இருந்தால் அது தீர்ந்த பிறகுதான் நில வள வங்கி மூலம் கடன் கொடுக்க இயலும் என்று சொல்லுகிறார்களே, இது அமைச்சருக்குத் தெரியுமா? இதனால் நில அபிவிருத்திக்கோ, கிணறு வெட்டுவதற்கோ, பம்ப் செட்டுகளை வைப்பதற்கோ தடங்கல் ஏற்படுகிறது. பழைய கடன் இருந்தால் அந்தக் கடனையே உள்ளடக்கி வேறு கடன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இது பற்றி அமைச்சருக்குத் தெரியும். இதுபற்றித் தீவிரமாக அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.

Supermarkets.

*156 Q. Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any supermarket is to be set up at Kancheepuram shortly; and

(b) if so, the details thereof?